1982 பிப்ரவரி 12]

சென்னையிலுள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்புகளுக்கான வாடகை.

*வினா எண். 176 —திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்பு மனை வாடகை 1-2-1981 முதல் 20% அதிகப்படுத்தப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) வீட்டுவசதி வாரியம் அதனுடைய 27-12-80 நாளிட்ட தீர்மான எண். 481-ல் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளுக்கு வாடகையை 1-2-81 முதல் 20 சதவீதம் உயர்த்துவதென முடிவெடுத்தது. ஆனால், வீட்டுவசதி வாரியம் 20% உயர்த்திய வாடகையை அரசு மறுஆணை வழங்கும் வரை வசூலிக்கக்கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லண்டனிலே காலியாக இருக்கும் இடத்தை அரசே கையகப்படுத்தி, அங்கே வீடுகள் கட்டிக்கொடுப்பதைப்போல், சென்னை நகரத்தில் இருக்கும் காலிஇடங்களையும் அரசு கையகப் படுத்தி வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்வி வாடகையை உயர்த்தியது பற்றியது. அதைத் தொடர்ந்து கேள்வி கேட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

தஞ்சையிலுள்ள E.S.I. மருத்துவமனை

*வினா எண். 177—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரில் S.I. மருத்துவமனைக்கு சொந்த கட்டடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்ட செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்புநிதித்தொகை.

*வினா எண். 178— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—